

புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் திருவள்ளுவர் ஆண்டு 2049 பிப்ரவரி 15, 2018 புரட்சி 17 முழக்கம் 05 விலை: ரூ.3.00

## பெரியார் பல்கலைக்கழகத்தில் மதயாத்திரைக்கு வரவேற்பா?

# கழகம் கருப்புக் கொடி; தோழர்கள் கைது

சேலம் பெரியார் பல்கலைக்கழகம், பா.ஜ.கவின் மதவாத யாத்திரைக்கு அனுமதித்து, மாணவர்களைப் பயன்படுத்தியதற்கு கழகத் தோழர்கள் கருப்புக் கொடிக் காட்டி எதிர்ப்பு தெரிவித்தனர்.

சுவாமி விவேகானந்தரின் மேலை நாட்டுச் சீடரான நிவேதிதை 150ஆவது பிறந்தநாள் ரத யாத்திரையை பெரியார் பல்கலைக் கழகம் வரவேற்கும் நிகழ்ச்சிக்கு, திராவிடர் விடுதலைக் கழம் எதிர்ப்பு தெரிவித்து 10-02-2018 மாலை 3 மணிக்கு கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்தியது. போராட்டத்தில் ஈடுபட்ட 42 தோழர்கள் கைதானார்கள்.

சுவாமி விவேகானந்தரின் மேலை நாட்டுச் சீடரான நிவேதிதை 150 வது பிறந்து நாள் விழா, ஆர்.எஸ்.எஸ் மற்றும் ராமகிருஷ்ணா மடம் சார்பில் நடைபெற்று வருகிறது. இதையொட்டி நிவேதிதை 150 வது ரத யாத்திரை கடந்த 22ஆம் தேதி தொடங்கி ஒவ்வொரு மாவட்டமாக தமிழகம் முழுவதும் சுற்றி எதிர் வரும் 22-ம் தேதி ரத யாத்திரை முடிவடைகிறது. பா.ஜ.க. பின்னணியோடு இது நடக்கிறது.

இந்த நிலையில் பிப்.10 காலை சேலம் மாவட்டம் ஆத்தூருக்கு வந்த ரதமானது, சேலம் மாநகரில் உள்ள சாரதா கல்லூரிக்கு வந்தது. அங்கு நடந்த வரவேற்பு நிகழ்ச்சியில் ரதயாத்திரை மாநில ஒருங்கிணைப்பாளரும், பா.ஜ.க நிர்வாகியுமான வானதி சீனிவாசன் பங்கேற்று உரையாற்றினார்.

இதனைத் தொடர்ந்து ரதமானது சேலம் பெரியார் பல்கலைக் கழகத்திற்கு வந்தது. பெரியார் பல்கலைக் கழக மாணவர்கள் ரத யாத்திரையில் பங்கேற்கப் பல்கலைக் கழக நிர்வாகம் சார்பில் அழைப்பு விடப் பட்டிருந்தது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், பெரியார் பல்கலைக் கழகத்தில் மதவாதத்தைப் பரப்பக் கூடாது என கண்டனம் தெரிவித்தும், திராவிடர் விடுதலை கழகத் தோழர்கள் கருப்பு கொடி ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டனர். ரதயாத்திரை பெரியார் பல்கலைக் கழக வளாகத்திற்குள் நுழையும் போது, திராவிடர் விடுதலைக் கழகத்தினர் கண்டன முழக்கங்களை எழுப்பினர். அப்போது காவல் துறையினர் தடுத்து நிறுத்தி, கைது செய்தனர். கைது செய்யப்பட்ட 42 பேரும் வேனில் ஏற்றி அழைத்துச் செல்லப்பட்டனர். இதனால் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.




போராட்டத்துக்கு சேலம் டேவிட் (மேற்கு மாவட்ட செயலாளர்) தலைமை தாங்கினார். மேட்டூர் கோவிந்தராஜ் (கிழக்கு மாவட்ட செயலாளர்), சக்திவேல் (மேற்கு மாவட்டத் தலைவர்), நங்கவள்ளி கிருஷ்னன் (மாவட்ட அமைப்பாளர்) உள்ளிட்ட 42 தோழர்கள் பங்கேற்றனர்.

இதனிடையே பெரியார் பல்கலையில் பயின்று வரும் மாணவி வளர்மதி கூறும்போது, கட்டாயப்படுத்தி மாணவர்களை வரவழைத்து, இந்துத்துவா கொள்கைகளை பரப்பி வருவது கண்டிக்கத்தக்கது என்றார். ரத யாத்திரைக்கு எதிர்ப்பு தெரிவித்து முழக்கங்களை எழுப்பிய மாணவி வளர்மதியையும் காவல் துறை கைது செய்தது.

## கூட்ட மேடையில் தமிழர் 'பீப்' பகோடா




திருவொற்றியூர் பொதுக் கூட்ட மேடையில் ஒரு மேஜை மீது ஸ்டவ் அடுப்பும், அதற்கு மேல் எண்ணெய் சட்டியும் வைக்கப்பட்டு, கீழே அறிவிப்புப் பலகை தொங்கவிடப்பட்டிருந்தது.

மோடியின் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் "தமிழர் பீப் பகோடா இங்கு விற்பனைக்குக் கிடைக்கும். உரிமையாளர் ஜெயா, எம்.ஏ., எம்.பி.எல்., பி.எச்டி." என்று எழுதப்பட்டிருந்தது. பகோடா விற்று நாளொன்றுக்கு ரூ.200 சம்பாதிக்கும் இளைஞர்கள்கூட எங்கள் ஆட்சியின் வேலை வாய்ப்புத் திட்டத்தில் பயன் பெற்றவர்கள்தான் என்று பிரதமர் மோடி, தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியை கிண்டல்செய்து, இந்தக் காட்சியை மேடையில் தோழர்கள் அரங்கேற்றியிருந்தனர். கூட்டத்தினர் இதை மிகவும் பாராட்டி இரசித்தார்கள்.

## சென்னை கூட்டத்தில் கொளத்தூர் மணி பேச்சு

# அகில இந்திய தேர்வுகள் தமிழகத்தை வடவர் மயமாக்குகின்றன

வட சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகச் சார்பில் 10.2.2018 சனி மாலை 6 மணியளவில் சென்னை திருவொற்றியூர் பெரியார் நகரில், 'வஞ்சிக்கப்படும் தமிழ்நாடு' எனும் தலைப்பில் பொதுக் கூட்டம் நடந்தது. காவை இளவரசன், 'மந்திரமா தந்திரமா' நிகழ்ச்சிகளை நடத்தினார். தொடர்ந்து பெ. முத்துக்குமார் தலைமையில் பொதுக் கூட்டம் தொடங்கியது. 'கடலோர மக்கள் களம்' அமைப்பின் தலைவர் தோழ. ஜான்சன், தமிழ் தேசியக் கட்சித் தலைவர் ஆ.கி. ஜோசப் கென்னடி, வழக்கறிஞர் துரை. அருண் ஆகியோர் உரையைத் தொடர்ந்து, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரை யாற்றினர். விடுதலை இராசேந்திரன் தனது உரையில், தமிழர்களையும் தமிழ்நாட்டையும் தமிழ் மொழியையும் வஞ்சிப்பது நடுவண் அரசம், பார்ப்பனர்கள் உயிர்ப்புடன் இப்போதும் பாதுகாத்துவரும் பாசிசத் தத்துவமான பார்ப்பனியமும் தான் என்று எடுத்துரைத்து வைரமுத்துவுக்கு எதிராக உருவாக்கப்பட்ட ஆண்டாள் சர்ச்சை, தமிழ்த் தாய் வாழ்த்தை அவமதித்த சங்கராச்சாரி, திராவிட ஆட்சிகளை வீழ்த்த பா.ஜ.க. நடத்திய பார்ப்பன யாகம், உயர்நீதிமன்ற வழக்காடு மொழியாக தமிழை அனுமதிக்க மறுக்கும் மோடி ஆட்சி, தமிழர் நாகரிக சிறப்புகளை விளக்கும் கீழடி அகழ்வாராய்ச்சியை முடக்கும் நடுவண் ஆட்சி ஆகிய பிரச்சினைகளை விளக்கிப் பேசினார்.




கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தமிழ்நாட்டில் மத்திய அரசு வேலைவாய்ப்புகளில் கொல்லைப்புற வழியாகக் குவியும் வடநாட்டுக்காரர்கள், தமிழ்நாட்டின் கிராமப்புறங்களிலிருந்து மருத்துவம் படிக்க வரும் ஒடுக்கப்பட்ட சமுதாய மாணவர்களின் மருத்துவக் கனவுகளைச் சிதைக்கும் 'நீட்' தேர்வு. மற்றும் நீட் தேர்வுக்கு எதிராக தீர்ப்பளித்த உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஓய்வு பெறும் காலம் வரை காத்திருந்து, 'நீட்'டுக்கு ஆதரவாக தீர்ப்பளித்த பார்ப்பன நீதிபதியின் முன் அவசரமாக விசாரணைக்குக் கொண்டு வந்து, நீதிமன்ற நடைமுறைகளைப் பின்பற்றாமலே நயவஞ்சகமாக திணிக்கப்பட்ட 'நீட்' தேர்வு சதிகளை ஆதாரங்களோடு அம்பலப்படுத்தினார். 'தனியார் மயம்' என்ற கொள்கை பார்ப்பனமயமாக்கியது என்றால் அகில இந்திய தேர்வு முறைகளால் தமிழ்நாடு வடவர் மயமாகிறது என்று விளக்கினார். தோழர் குகன் நன்றி கூறினார். கூட்டத்தினர் கலையாது இறுதி வரை கருத்துகளை செவிமடுத்தனர். தென்சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் இரா. உமாபதி நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தார். வடசென்னை மாவட்டக் கழகப் பொறுப்பாளர்கள் யேசுகுமார், செந்தில் எப்.டி.எல்., ராஜீ, சங்கீதா, தெட்சிணா மூர்த்தி, பாஸ்கரன், முனுசாமி உள்ளிட்ட தோழர்கள் கூட்டத்துக்கான ஏற்பாடுகளை சிறப்பாகச் செய்திருந்தனர்.

## ஜீயர் மீது வழக்கு பதியக்கோரி உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல்!

கொளத்தூரில் 'ஆண்டாள் ஆய்வுக்குரியவளே' என்ற தலைப்பில் ஆய்வரங்கம் நடத்த திராவிடர் விடுதலைக் கழகம் திட்டமிட்டிருந்த நிகழ்ச்சியில் 'சோடா பாட்டில் வீசுவோம்' என்று வன்முறையைத் தூண்டும் விதமாகப் பேசிய சடகோப ராமனுஜன் மீது வழக்குப் பதியக் கோரி நாமக்கல் மாவட்ட திவிக சார்பில் திருச்செங்கோடு நகர காவல் கண்காணிப்பாளரிடம் மனு அளிக்கப்பட்டிருந்தது.

இந்த மனுவின் மீது திருச்செங்கோடு துணை கண்காணிப்பாளர் எந்த நடவடிக்கையும் எடுக்காததால் மாவட்ட கண்காணிப்பாளரிடம் புகார் அளிக்கப்பட்டது. அதன் பிறகும் காவல்துறை எந்த நடவடிக்கையும் எடுக்காததால் சென்னை உயர்நீதிமன்றத்தில் நாமக்கல் மாவட்ட அமைப்பாளர் மா.வைரவேல் சார்பில் சடகோப ராமனுஜன் மீது வழக்குப் பதிவு செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனு நீதிபதி எம்.எஸ்.ரமேஷ் முன்னிலையில் பிப்ரவரி 13ஆம் தேதி விசாரணைக்கு வரவுள்ளது.

# அன்பைவிட நம்பிக்கையே முக்கியமானது!

சமத்துவமற்ற உலகில் எல்லோரும் எல்லோரிடமும் உண்மையான அன்பு செலுத்திட முடியாது. ஆணும் பெண்ணும் இங்கே சமமானவர்களாய் இல்லை. எனவே காதலும் சிக்கல் நிறைந்ததாகவே இருக்கும்.

அன்றைக்கும் புழுவினும் அடிமையாயிருந்த பெண் தனக்கென ஒரு அடையாளம் பெற்றபோது அங்கே காதல் மலர ஆரம்பித்தது. பிறகு ஆண்களால் துய்க்கப்படுவதற்கான போகமாய் மட்டும் இருந்தவள் மெல்ல சுவாசிக்க ஆரம்பித்த போது காதல் தன் மணத்தைப் பரப்பியது. இன்றைக்கு சந்தை உலகத்தில் விற்பனைப் பொருளாய் கருதப்படும் பெண் அதிலிருந்து மீள முயற்சிக்கும்போது காதல் அதற்கான விடுதலை கீதத்தை இசைக்கிறது. இதிலிருந்து தான் ஆணுக்கும் பெண்ணுக்குமான முரண்பாடுகள் கூர்மையடைகின்றன.

இந்த முரண்பாடுகளை சரி செய்யவோ, இணக்கங்களை உருவாக்கவோ விரும்பாத சமூகம் காதலை உலகத்திலிருந்து தள்ளி வைக்கவும், கொச்சைப்படுத்தவும் முயலுகிறது.

இதனை அறிவுபூர்வமாக ஆணும், பெண்ணும் புரிந்து கொண்டு, உணர்வுபூர்வமான உறவுகளை செழுமைப்படுத்திட முயற்சிக்க வேண்டும். காமம், அன்பு, நம்பிக்கை, சுதந்திரம் என எல்லாம் கலந்த ஆண், பெண் உறவே காதலாகிறது. அதை விட்டு விட்டு காதலை வெறும் காமம் என்றோ அல்லது காமத்தை முழுமையாகக் கடந்த நூறு சதவீதம் புனிதமாகவோ பார்த்திட முடியாது.

உடலைத் துறந்து நினைவுகளிலேயே வாழ்வது என்பது இயற்கைக்குப் புறம்பான கற்பனையே. பறவைகளுக்கு கால்கள் தேவையில்லை. சிறகுகள் மட்டும் போதும் என்பதுபோலத் தான் இது. உடல்களில்லாமல் நினைவுகள் இல்லை. உள்ளங்களில் மட்டுமில்லை, உள்ளங்கைகளின் வெது வெதுப்பிலும் காதல் இருக்கிறது.

இளமைப் பருவத்தில் ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையில் தோன்றும் மயக்கம் முதலில் உடல் சார்ந்ததாகவே இருக்கிறது. உடல்களை அறிகிற வேகமே காதலாய் காட்சியளிக்கிறது. அதுவே முழுக்க முழுக்க உடல் சார்ந்ததாய் மாறும்போதுதான், கிறக்கம் களைந்தவுடன் காதலும் காட்சிப் பிழையாகிக் காணாமல் போய் விடுகிறது. "பதனீரைக் குடித்துவிட்டு பட்டையைத் தூக்கி எறிவது போல என்னையும் தூக்கி எறிந்து விடுவாய்" என்று ஒரு ஆணிடம் சங்ககாலப் பெண் சொன்ன அவநம்பிக்கை இன்னும் பெண்களிடம் இருக்கிறது.

இதனை சமூகத்தில் தக்க வைத்துக் கொண்டிருப்பது ஊடகங்களால் திணிக்கப்பட்ட உடல் குறித்த மயக்கங்களே. திரைக் கதாநாயகி களும், கதாநாயகர்களும், விளம்பர மாடல்களும், ஆண் பெண் உருவங்களை முன்னிறுத்துகிறார்கள். அவர்களே காதல் உலகத்தின் தேவர்களாகவும், தேவதைகளாகவும் வந்து அசைந்தாடுகிறார்கள். தோற்றங்களே அழகென மயக்கம் வருகிறது. வெற்று பிம்பங்களே இளமையின் அற்புதங்களை ஆட்டுவிக்கின்றன.

பெண் என்பவள் வெறும் உடல் மட்டும்தான் என்ற சிந்தனை சமூகத்தில் இருந்து அகற்றப்படும் போதுதான் சூரியன் பெண்களுக்காகவும், காதலுக்காகவும் உதிக்கும். உடல் குறித்த பயத்தையும், பெருமிதத்தையும் பெண்ணிட மிருந்தும், பிரமைகளை ஆண்களிடமிருந்தும் பிரித் தெடுக்கும்போது எல்லோரும் அழகானவர்களாக வும், நம்பிக்கை மிக்கவர்களாகவும் இருப்பார்கள். காதலின் கதவுகள் அங்கு திறந்தே இருக்கும். அப்போது காதல் ஒரு சிற்றின்பமாக சிறுத்தும் போகாது. இளமைப் பருவத்தில் மட்டும் வந்துவிட்டுப் போகிற உணர்வாகவும் இருக்காது.

உடலைத் தாண்டி நெருங்குகிறவர்கள் ஒருவருக்காக ஒருவர் தன்னை இழப்பதோ அல்லது ஒருவரையொருவர் ஆக்கிரமிப்பதோதான் காதல் என்றும் நினைத்துவிடுகிறார்கள்.

இதுதான் இன்றைய காதலின் பிரச்சினையாக இப்போது தெளிவாகப் புரிய முடிகிறது. ஒரு ஆண் தனது வாழ்க்கைத் துணை தன்னைப் போலவே சிந்திக்க வேண்டும், பேச வேண்டும் என விரும்புகிறான். அதுபோலவே பெண்ணும் ஆணிடம் இதை எதிர்பார்க்கிறாள். அவரவர் முரண் பாடுகளை ஒப்புக் கொள்ளாமல், ஏற்றுக் கொள்ளாமல் விலகி நிற்கும் மனோபாவமே இதில் வெளிப்படுகிறது. ஆணும் பெண்ணும் சமம் என்று நினைக்கும் போதுதான் ஒருவரையொருவர் அங்கீகரிக்கும் பக்குவம் மனிதர்களுக்கு சாத்தியப்படும்.

ஆணும், பெண்ணும் ஒருவரையொருவர் புரிந்து கொள்வதுதான் காதலின் அர்த்தம். ஆனாலும் இந்த முரண்பாடுகளை எங்கே மனிதர்கள் புரிந்து வைத்திருக்கிறார்கள்? அவரவர் நிலைகளில் நின்று கொண்டு ஒருவர் பக்கம் ஒருவரை இழுக்க முயற்சிக்கும் கயிறு இழுக்கும் போட்டி ஒரு போதும் காதலாகப் பரிணமிக்க முடியாது.

**பிப்ரவரி 14**
**உலக காதலர் நாள் சிந்தனை**

ஆக்கிரமிக்கும் மனதில் அதிகாரமும், இழந்து கொண்டிருக்கும் மனதில் அடிமைத்தனமுமே வசிக்கின்றன. தனக்கு மட்டுமே அவன் என்றும் அல்லது அவள் என்றும் ஒருவரையொருவர் சிறைப்பிடிப்பது காதலாகாது. ஒருவர் மீது ஒருவர் வைத்திருக்கும் அன்பைக் காட்டிலும், நம்பிக்கை முக்கியமானது. நம்பிக்கையற்ற அன்பு விபரீதமானது. இதை 'பொஸஸிவ்' என்று ஆங்கிலத்தில் உச்சரித்துக் கொண்டு பெருமிதம் கொள்ளும் பைத்தியங்களாய் பலர் இருக்கிறார்கள். தங்கள் துணையின் காலடிகளை சதா நேரமும் மோப்பம் பிடித்துக் கொண்டே இருப்பார்கள்.

ஒருவர் பற்றிய ஒருவரின் நினைவு எப்போதும் பரவசத்தையும், சந்தோஷத்தையும் தருவதாக இருக்க வேண்டும். காதலர்களுக்கிடையே மனஸ் தாபங்களே வராது, வரக் கூடாது என்பதெல்லாம் அதீதக் கற்பனையே. அந்த நிகழ்வுகளிலிருந்து எப்படி ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு இணக்கம் கொள்கின்றனர் என்பதுதான் முக்கிய மானது. ஒருவருக்கொருவர் எதிரிகளாகப் பார்க்காமல், தன் அன்பின் துணை என்னும் சிந்தனை தெளிந்திருந்தால் முரண்பாடுகளை எதிர்கொள்ளும் விதமே அலாதியானதாகவும், அற்புதமாகவும் மாறும்.

காதல் வாழ்க்கை ஆணுக்கும், பெண்ணுக்கும் பரிபூரண சுதந்திரத்தைக் கொடுப்பதாக இருக்க வேண்டும். இலக்கியத்திலும், வெளியிலும் பார்ப்பதைவிட்டு காதலைத் தங்களுடைய வாழ்வாக அறிதல் வேண்டும். ஒரு ஆணும் ஒரு பெண்ணும் அவரவர்களுக்கான சுதந்திரத்தை எடுத்துக் கொள்வதிலும், பகிர்ந்து கொள்வதிலுமே காதலின் அர்த்தம் இருக்கிறது.

காதல், காதலர்களை மேலும் மேலும் வளர்த்தெடுக்க வேண்டும்.

இந்த வளர்ச்சி சுயநலமற்றதாகவும், சமூகம் சார்ந்ததாகவும் பரிணமிக்கும்போது காதல் மகோன்னதம் பெறும்.

ஆண், பெண் இருவருமே உலகம் சார்ந்த மனிதர்களாய், சமமாய் மாறும்போது இந்த அற்புதம் நிகழும். ஒருவரையொருவர் காதலித்த, சேர்ந்து உலவித் திரிந்த, பேசி மகிழ்ந்த, சண்டை போட்டுத் தவித்த, பிரிந்து சேர்ந்த காலங்களோடு இந்த பூமி சுற்றிக் கொண்டிருக்கிறது. இந்த பூமியில் எல்லோரும் பார்க்கும்படியாகக் காதலர்கள் தங்கள் மரணங்களையும் வெறும் பெயர்களையும் எழுத வேண்டாம். தங்கள் வாழ்க்கையை எழுதட்டும்.

காதலின் சின்னங்களாகக் கல்லறைகள் வேண்டாம். வாழும் வீடுகளே இருக்கட்டும்.

**ஜா. மாதவராஜ் எழுதிய**
**'ஆதலினால் காதல் செய்வீர்' நூலிலிருந்து**

## திருப்பூரில் 'நிமிர்வோம்' நூல் விற்பனை அரங்கிற்குப் பேராதரவு

திருப்பூர் மாவட்ட கழகம் சார்பாக திருப்பூரில் நடந்த புத்தகத் திருவிழாவில் 'நிமிர்வோம்', புத்தக நிலையம் அரங்கு எண்.94 செயல்பட்டது. பெரியார், அம்பேத்கர் கொள்கைகளை இளைய சமூகத்தினரிடம் கொண்டு சேர்க்கும் நோக்குடன் புத்தகங்கள் வைக்கப்பட்டிருந்தன.



11 நாட்கள் நடைபெற்ற புத்தகத் திருவிழாவில் அரங்கின் முதல் நாள் விற்பனையைக் கழகப் பொருளாளர் சு. துரை சாமி, அறிவியல் மன்ற அமைப் பாளர் வீ. சிவகாமி, தலைமைக் குழு உறுப்பினர் சூலூர் பன்னீர் செல்வம் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

புத்தகத் திருவிழாவின் ஆயத்தப் பணிகளான அரங்கு வடிவமைத்தல், புத்தகங்களைத் தருவித்தல் போன்ற பணிகளில் கழக மாவட்டத் தலைவர் முகில் இராசு, இணையதள பொறுப்பாளர் விஜயகுமார், ஆசிரியர் சிவகாமி, மாவட்ட அமைப்பாளர் முத்து, சத்தியமூர்த்தி, சூரி ஆகியோர் கவனித்தனர்.

அரங்கின் விற்பனையை மாவட்ட அமைப்பாளர் சங்கீதா, சரசு, பார்வதி, வே. இராமசாமி ஆகியோர். காலை முதல் மாலை வரை புத்தக நிலையத்தின் விற்பனையையும், அரங்கிற்கு வருவோரிடம் கொள்கை உரையாடல்களையும் நிகழ்த்தினர். மாலை வேலைகளில் மாணவர் கழகத் தோழர்கள் கனல்மதி, தமிழ்ச் செழியன், பிரசாந்த் ஆகியோர் பங்கேற்றனர்.

திருப்பூர் பதியம் இலக்கிய அமைப்பின் பாரதி வாசன் மகன் மதிவதனன் எழுதிய, 'தாழப் பறக்கும் வானம்' என்ற கவிதைத் தொகுப்பின் விற்பனைத் தொகை ரூ.1000/-த்தை புத்தக நிலையத்திற்கே நன்கொடையாக வழங்கியதோடு அல்லாமல் உடன் இருந்து சிறப்பித்தார். வே. இராமசாமி, புத்தக நிலையத்திற்கு தன்னுடைய படைப்புகளின் 10 பிரதிகளை நன்கொடையாக வழங்கினார்.

மொத்த விற்பனை ரூ.51,800/-. ஆதரவாளர்கள் கொள்கை உணர்வாளர்களிடம் தொடர்புகளை உருவாக்க இந்த அரங்கு மிகவும் உதவியது.

அரங்கிற்கு நன்கொடை வழங்கியவர்கள் : முகில் இராசு – ரூ.2000; நீதிராசன் – ரூ.2000; முத்துக்குமார் – ரூ.2000; இணைய தள விஜயகுமார் – ரூ.1000; பதியம் பாரதிதாசன் – ரூ.1000; பரிமளம் – ரூ.1000; ராமசாமி – ரூ.1000; ஆதிரா, கலை – ரூ.1000; தனபால் – ரூ.500; வெள்ளியங்காடு மு. மணி – ரூ.500

# ஆதாரங்களுடன் விடுதலை இராசேந்திரன் பேச்சு

# தமிழ் சமூகத்தையே சமஸ்கிருத மயமாக்கியவர்கள் பார்ப்பனர்கள்

*‘ஆண்டாள் முதல் சங்கராச்சாரி வரை... தமிழை மறுக்கும் வேதமரபுகள்’ என்ற தலைப்பில் ஜன.30, 2018 அன்று சென்னை இராயப்பேட்டை ஆனந்த் அரங்கில் திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய கருத்தரங்கில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் நிகழ்த்திய உரையிலிருந்து...*

தமிழைத் தீட்டு மொழி என்று கூறி, தமிழ் பேசினாலேயே உடல் முழுதும் குளியல் போட்டு தீட்டுக் கழிக்கும் ‘இவாள்’தான், ‘பெரியாரை - தமிழ் விரோதி’ என்கிறார்கள். புராணக் கதைகளிலும் இராமாயணப் பெருமைகளிலும் பக்தி இலக்கியங் களிலுமே மூழ்கிக் கிடக்கும் தமிழை அறிவியல் மொழியாக்க வேண்டும் என்றார் பெரியார். திருக்குறளுக்காக மாநாடு போட்டு, திருக்குறளை குறைந்த விலையில் கையடக்க நூலாக மக்களிடம் கொண்டு சென்றவர் பெரியார். தமிழ்ப் பாடல்களை அவமதித்து, அதைத் ‘துக்கடா’ என்று, இசை நிகழ்வில் ஒப்புக்காகப் பார்ப்பனர்கள் பாடியபோது, தமிழிசையைப் பாட மறுத்தபோது, அதற்காக இயக்கம் நடத்தியவர் பெரியார். கோயில் களுக்குள்ளே தமிழை வழிபாட்டு மொழியாக்க வேண்டும் என்று போராடியவர் பெரியார். தமிழர் வீட்டுத் திருமணங்கள், நிகழ்வுகள், இல்லத் திறப்புகளில் வடமொழியை நீக்கி, தமிழில்நடத்தும் முறையை மக்களிடம் கொண்டு சென்றது பெரியாரும் பெரியார் இயக்கமும்தான். தமிழ் எழுத்து சீர்திருத்தத்தை அறிமுகப்படுத்தியது பெரியார். உயர்நீதிமன்றத்தில் தமிழ் வழக்காடு மொழியாக வேண்டும் என்று கூறியவர் பெரியார். தமிழ் வழிப் பாடத் திட்டத்தை கலைஞர் ஆட்சி அறிமுகம் செய்தபோது அதை அன்று காங்கிரஸ் கட்சியும், பார்ப்பனர்களும் எதிர்த்தபோது தமிழ் வழிக் கல்வியை உறுதியாக ஆதரித்தவர் பெரியார். ஒரு காலத்தில் தமிழில் பாட நூல்கள், அறிவியல் நூல்கள் இல்லாத காலத்தில் ஆங்கிலம் படித்துப் பார்ப்பனர்கள் கல்வியை தங்களின் ஏகபோகமாக வைத்திருந்த காலத்தில் தமிழர்கள் ஆங்கிலம் படிக்க வேண்டும் என்று சமூக நீதிக் கண்ணோட்டத்தில் பெரியார் பேசினார். பிறகு அவரே மாற்றங்களைக் கருத்தில் கொண்டு, தமிழ் வழிக் கல்வியை ஆதரித்தார். ஆனால் வேத மதம், சமஸ்கிருதத்தை மட்டுமே தமிழர்களின் பண்பாடுகளில் தெய்வீக மொழியாக இன்று வரைத் திணித்துக் கொண்டு சமஸ்கிருதத்தில் ஓதும் வேத மந்திரங்களே இறைவனுக்குப் புரியும் என்று தமிழரின் மொழிப் பண்பாட்டை சிதைத்து வருவதும் இந்தக் கூட்டம்தான், பெரியாரை தமிழுக்கு எதிரி என்று தொடர்ந்து பொய்ப் பிரச்சாரம் செய்து வருகிறது.

தமிழ் மன்னர்களை பார்ப்பனீயத்துக்கு அடிபணிய வைத்தவர்கள் பார்ப்பனர்கள். அதனால் மன்னர்களே தங்கள் தமிழ்ப் பெயர்களையே சமஸ்கிருதமாக்கிக் கொண்டார்கள்.

இராஜஇராஜன், இராஜேந்திரன், இராஜாதி இராஜன் குலோத்துங்கன், விக்ரமன், இராஜகேசரி, பரகேசரி - இவை எல்லாம் தமிழ் மன்னர்கள் சூட்டிக் கொண்ட வடமொழிப் பெயர்கள். பார்ப்பனர்கள் அப்படி எல்லாம் சமூகத்தில் ஆதிக்கம் செலுத்தி, தமிழை வீழ்த்தினார்கள். இரண்டாம் தர மொழி யாக்கினார்கள்.

அது மட்டுமா? தமிழ்நாட்டின் ஊர்ப் பெயர்கள், கடவுளின் பெயர்கள் இப்படி எல்லாப் பெயர் களையும் தமிழிலிருந்து நீக்கி, வடமொழியாக்கி யவர்கள் பார்ப்பனர்கள். மயிலாடுதுறையை மாயூர மாக்கினார்கள்; தி.மு.க.வின் சட்டமன்ற உறுப்பினராக இருந்த சுயமரியாதைக்காரர் கிட்டப்பா, விடாமல் பல ஆண்டுகள் போராடி, மாயூரம் என்ற பெயரை மயிலாடுதுறை என்று மீண்டும் தமிழில் மாற்றம் செய்தார். திருமுதுகுன்றம் விருத்தாசலமாயிற்று. மரைக்காடு மறைக்காடாகி, அது திருமறைக் காடாகிப், பின் வேதாரண்யம் என்ற வடமொழிப் பெயரானது. தமிழ்நாட்டில் தமிழன் கட்டிய கோயில்களில் தமிழன் வடித்த சிற்பங்களுக்கு தமிழ்ப் பெயர் சூட்டுவதை ‘தீட்டாக்கிய’ பார்ப்பனக் கூட்டம்தான், பெரியாரை தமிழுக்கு எதிரி என்கிறது. தியாகேசர், வைத்தீஸ்வரன், வெங்கடேசுவரன், யோகாம்பாள், அகிலாண்டேசுவரி, புவனேசுவரி, பிரம்மபுரீஸ்வரர், பிரம்ம வித்யா நாயகி, கோகிலேஸ்வரர், சொர்ணபுரீஸ்வரர், சகல புவனேஸ் வரர், அருணாசலேஸ்வரர் என்று கடவுளுக்கும் வடமொழிப் பெயரையே சூட்டினார்கள். கடவுளே இந்தப் பெயர்களை சூட்டிக் கொண்டது என்று கூறுவார்களா? கடவுளை எப்படி இவர்கள் உருவாக்கினார்களோ, அதேபோல் பெயரையும் உருவாக்கினார்கள். கடவுளுக்கும் இங்கே அடையாளங்கள் தேவைப்படுகின்றன. ஆனால், தமிழ் அடையாளமோ, தமிழர் அடையாளமோ அல்ல; வேத பார்ப்பனிய அடையாளங்களையே போர்த்திக் கொண்டு நிற்கின்றன.

தமிழர்களின் வாழ்வியல் நிகழ்வுகளிலாவது தமிழை அனுமதித்தார்களா? விவாஹம், கர்ண பூஷணம், கிரகப்பிரவேசம், புஷ்பவதியாதல், கன்னிகாதானம், சஷ்டியப்தப்பூர்த்தி, ஸ்நார்த்தம், தீர்த்த யாத்திரை என்று சமஸ்கிருத மயமாக்கிய கூட்டம், பேச்சு வழக்கிலும் சௌகரியம், க்ஷேமம், ஜலம், ஸ்நானம், யஜமான், புருஷன், உபயோகம், பிரயோஜனம், யோஜனை, விசேஷம், விசுவாசம், நமஸ்காரம், லக்ஷணம், அவலக்ஷணம் என்று வடமொழியைப் புகுத்தியது.

தமிழை - வேதமரபு, தனது சமஸ்கிருதத் திமிரால் அவமதித்ததற்கும், தமிழை சிறுமைப்படுத்தியதற்கும் வரலாற்றில் எத்தனையோ ஆதாரங்களை அடுக்கிக் காட்ட முடியும். அந்த வேத மரபின் தொடர்ச்சிதான் காஞ்சி சங்கராச்சாரி மடம், ‘தமிழ்த்தாய் வாழ்த்தை மதிக்க மாட்டேன்’ என்று திமிராட்டம் போடுவதும். ‘ஆண்டாளுக்கு’ அவமதிப்பு என்று கூப்பாடு போடும் பார்ப்பனர்கள், ஆண்டாள் பாடிய தமிழை மதித்தார்களா? திருவில்லிபுத்தூரிலாவது தமிழ் வழிபாடு நடக்கிறதா?

மற்றொரு வரலாற்று செய்தியை குறிப்பிடலாம். தஞ்சை மாவட்டம் திருவையாறு எனும் ஊரில், அரசு சார்பில் ஒரு சமஸ்கிருதக் கல்லூரி நடந்தது. பார்ப்பனர்கள் மட்டுமே படிக்க அனுமதிக்கப் பட்டார்கள். சுயமரியாதை உணர்வுள்ள சர். ஏ.டி.பன்னீர்செல்வம், மாவட்ட வாரியத் தலைவராக இருந்தபோது, சமஸ்கிருதக் கல்லூரியில் தமிழையும் கற்றுத் தர உத்தரவிட்டார். உடனே பார்ப்பனர்கள், சமஸ்கிருதத்துக்கான தனிக் கல்லூரியில் தமிழையும் கற்றுத் தருவதால் புனிதம் போய்விடும்; ஆச்சாரம் கெட்டுப் போகும் என்று அலறினார்கள். தமிழ்ப் படிக்க வந்த பார்ப்பனரல்லாத மாணவர்களுக்கு விடுதியில் தனி இடத்தில் சாப்பாடு போட்டார்கள். மாவட்ட நிர்வாகம் (வாரியம்) அதை அனுமதிக்க முடியாது என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டது. அப்போது ‘டிஸ்டாரிக் போர்டு’ என்ற மாவட்ட வாரியத்தின் தலைவராக இருந்த நாடிமுத்து (பிள்ளை), துணைத் தலைவராக இருந்த கிருஷ்ணசாமி (வாண்டையார்), 1941ஆம் ஆண்டு ஜனவரி 27 ஆம் தேதி விடுதியில் பார்ப்பன மாணவரும் பார்ப்பனரல்லாதார் மாணவரும் ஒரே இடத்தில்தான் ஒன்றாகத்தான் சாப்பிட வேண்டும் என்று நிர்வாக சபையில் தீர்மானமே நிறைவேற்றினார்கள். அன்றைக்கு பார்ப்பனரல்லாத சமுதாயத்தின் தலைவர்கள், பார்ப்பனக் கொடுமைகளுக்கு எதிராக எப்படி உறுதியுடன் செயல்பட்டிருக்கிறார்கள் என்பதை இப்போது பார்ப்பனர்களுக்கு அவர்களின் ‘வேத மரபு’களுக்கு துணை போவோர் புரிந்து கொள்ள வேண்டும். தீர்மானமே நிறைவேற்றியதற்குப் பிறகு இனி விடுதியில் சாப்பிடக் கூடாது என்று பார்ப்பனர்கள் தடைபோட்டு, ‘அக்கிரகார’ வீடுகளில் அப்போது சமஸ்கிருதம் படித்த 45 பார்ப்பனர் மாணவர்களுக்கும் சாப்பாடு போட்டார்கள்.

> **திருவையாறு சமஸ்கிருதக் கல்லூரியில் தமிழுக்கு இழைத்த அவமதிப்பு**

நாட்டில் பெரும் பேரழிவு நடக்கப் போகிறது என்றும், வேதம் படிக்கும் ‘பிராமண’ மாணவர்களை ‘தமிழ்’ படிக்கும் ‘சூத்திரர்’களுடன் ஒன்றாகப் பந்தியில் உட்கார வைத்துவிட்டார்கள் என்றும், நாடு முழுதும் பிரச்சாரத்தை முடுக்கி விட்டார்கள். 1941ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் சமஸ்கிருதக் கல்லூரியில் சமபந்தியைக் கண்டித்து மயிலாப்பூரில் பொதுக் கூட்டம் நடத்தியது ‘பிராமணர்கள்’ கூட்டம். மிகப் பெரும் செல்வாக்குள்ள புள்ளிகளான ‘ரைட் ஆனரபில்’ சீனிவாச சாஸ்திரி, சர். சி.பி. சிவகாமி அய்யர் (இவரது பெயரில் இப்பொழுதும் மயிலாப் பூரில் ஒரு மேல்நிலைப் பள்ளி செயல்படுகிறது), டி.ஆர். வெங்கட்ராம சாஸ்திரியார் போன்ற பார்ப்பனர்கள், இந்தக் கூட்டத்தில் தங்கள் வைதிக பார்ப்பன வெறியைக் கொட்டித் தீர்த்தார்கள். வெட்கக் கேடு என்னவென்றால், ‘சூத்திர’த் தமிழர்களான திவான் பகதூர் வி. மாசிலாமணிப் பிள்ளை, எம். பாலசுப்பிரமணி முதலியார், எம். இராஜமன்னார் செட்டியார், வையாபுரிப் பிள்ளை போன்ற ‘சூத்திர’ சைவர்களும், “வேதம் படிக்கும் ‘பிராமணர்’களுடன் தமிழ் படிக்கும் ‘சூத்திரனை’ எப்படி ஒன்றாகச் சாப்பிட வைக்கலாம்? இது அடுக்காது” என்று பேசினார்கள்.

ஆக, அந்தக் காலத்திலேயே எச். ராஜாக்களும் இருந்திருக்கிறார்கள். தமிழிசை, பொன் இராதா கிருஷ்ணனும் இருந்திருக்கிறார்கள். ‘சங்கராச்சாரி ஸ்வாமிகள் தியானத்திலிருக்கும்போது தமிழ் வாழ்த்துப் பாடலைக் கவனிக்காமல் விட்டுவிட்டார். இதைப்போய் ஏன் பெரிதுபடுத்த வேண்டும்’ என்று மத்திய அமைச்சர் பொன் இராதாகிருஷ்ணன் இன்று கேட்பது, அந்தக் காலத்தின் ‘சைவ சூத்திரர்களின்’ அதே குரல் தானே?

இந்த சமபந்தி ஜாதி வெறியை எதிர்த்து அன்று களத்தில் போராடியது பெரியாரும், அவர் நடத்திய விடுதலை பத்திரிகையும்தான் என்ற வரலாற்றை இளைஞர்கள் புரிந்து கொள்ள வேண்டும். ‘விடுதலை’ நாளேடு, இந்த ஜாதித் திமிரை எதிர்த்துப் போர்ச் சங்கு ஊதியது, சென்னை பிராட்வேயில் இருந்த கோகலே அரங்கில். ‘தஞ்சை ஜில்லா போர்டு’ தீர்மானத்தை ஆதரித்து, பெரியார் ஒரு கூட்டத்தைக் கூட்டினார். கூட்டத்துக்குத் தலைமை தாங்கியவர் சுப்பராயன் முதலமைச்சசராக இருந்து நடத்திய நீதிக்கட்சி ஆதரவு அமைச்சரவையில் பத்திரப் பதிவு அமைச்சராக இருந்து, முதன்முதலாக வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்ற பார்ப்பனல்லாதாருக்கு இடப் பகிர்வு முறையை அமுல்படுத்திய எஸ்.முத்தையா முதலியார்தான். பெரியார் கூட்டிய கூட்டத்தின் தலைவர், மதுரை, திருநெல்வேலி, திருச்சி போன்ற நகரங்களிலும், இதேபோல் பெரியார் கூட்டங்களை நடத்தினார். அப்போது கூட்டங்களில் பேசிய பெரியாரின் கருத்து எப்படி இருந்தது தெரியுமா? இந்து மதப் பிடியிலிருந்தும் இந்தியாவின் பிடியிலிருந்தும் நமது மக்களை விடுதலை செய்ய இந்தப் பிரச்சினைகள் எனக்கு மிகவும் பயன்படும் என்று தான் பேசினார்.

வேடிக்கை என்னவென்றால், எந்த ‘ஜில்லா போர்டு’, சமபந்தி தான் நடத்த வேண்டும் என்று தீர்மானம் போட்டதோ, அதே ஜில்லா போர்டு, காஞ்சி சந்திரசேகரேந்திர சரசுவதி தஞ்சைக்கு வந்தபோது அவரது ‘பாத பூஜை’க்கு ஏற்பாடு செய்து நிதி ஒதுக்கியது. வேதம் படிக்கும் ‘பிராமணர்கள்’ தமிழ் படிக்கும் ‘சூத்திரர்’களோடு சேர்ந்து உணவருந்தும் உத்தரவுப் பற்றி கேள்விபட்ட சங்கராச்சாரி கொதித்தெழுந்தார். வேதம் படித்த பார்ப்பனர்களுக்கு தனியாக சாப்பாடு போட பார்ப்பனர்களிடம் நிதி திரட்டினார் சங்கராச்சாரி. இப்படிப் பல பார்ப்பனியத் தடைகளைத் தகர்த்துத்தான் நமது சமுதாயம் மேலே வந்தது.

பார்ப்பனர்களை எதிர்த்தால், வேத மதத்தின் கொடுமைகளைச் சுட்டிக் காட்டினால், உடனே ‘இந்திய விரோதிகள்’, ‘தேச விரோதிகள்’, ‘ஆன்டி இந்தியன்’, இவர்களை நாட்டில் வாழவே அனுமதிக்கக் கூடாது என்று அதிகாரத் திமிரில் பார்ப்பனர்கள் பேசி வருகிறார்கள். ஊடகங்களிலும் ஆணவத் திமிரை வெளிப்படுத்தும் உடல் மொழிகளோடு பேசுவதை மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், பார்ப்பனர்களின் பரம்பரைதான் பிரிட்டிஷ் ஆட்சியில் ‘பிராமணர்’களுக்கு மட்டும் சமஸ்கிருத கல்லூரிகளை ஏற்படுத்த வேண்டும் என்று மனுபோட்டவர்கள். பிரிட்டிஷ் ஆட்சியும் முதலில் காசியில் ஒரு சமஸ்கிருதக் கல்லூரியையும், அடுத்து கல்கத்தாவில் ஒரு சமஸ்கிருதக் கல்லூரியையும் தொடங்கும் முயற்சிகளில் இறங்கியது. இதற்கு எதிர்ப்பு முதலில் யாரிடமிருந்து வந்தது தெரியுமா? இந்து மதத்துக்குள்ளே ‘உடன்கட்டை’ போன்ற கொடுமைகளை எதிர்த்துப் போராடிய பார்ப்பன சீர்திருத்தவாதி இராஜாராம் மோகன்ராயிடமிருந்து தான் வந்தது.

> **“சமஸ்கிருதக் கல்வியானது இந்தியாவை என்றென்றும் இருளில் ஆழ்த்திவிடும். இந்தியக் குடிமக்களின் முன்னேற்றத்தில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு அக்கறை இருக்குமானால் கணிதம், இயற்கைத் தத்துவம், வேதியல், உடற்கூறு ஆகிய பயனுள்ள அறிவியலைக் கற்றுத்தர ஏற்பாடு செய்ய வேண்டும்”**

என்று கவர்னர் ஜெனரலுக்கு அவர் கடிதம் எழுதினார்.

(தொடரும்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

## ஜாதி மறுப்பு இணையர்களுக்கு விருது

# தலைநகரில் கழகம் எடுத்த ‘காதலர் நாள்’













தென் சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக சார்பில் 11.2.2018 மாலை 4 மணியளவில் சென்னை அம்பேத்கர் நினைவு மண்டபத்தில் காதலர் நாள், ஜாதி மறுப்புத் திருமண இணையர்களுக்கு விருது வழங்கும் நிகழ்வு சிறப்புடன் நடைபெற்றது. காஞ்சி மக்கள் மன்றத் தோழர்களும், ம.க.இ.க. தோழர் காமராசும் ஜாதி ஒழிப்புப் பாடல்களைப் பாடினர். தோழர்கள் ஜெயநேசன், ரவிபாரதி கவிதைகளை வாசித்தனர். தொடர்ந்து, ‘எது தேவை? வாழ்வியல் காதலா? தெய்வீகக் காதலா?’ என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடந்தது. வே. மதிமாறன் நடுவராக இருந்தார். ‘வாழ்வியல் காதலே’ என்ற அணியில் திலகவதி, சுபா ஆகியோரும், ‘தெய்வீகக் காதலே’ என்ற அணியில் மேட்டூர் பரத், சென்னை யுவராஜ் ஆகியோரும் பேசினர்.

வே. மதிமாறன் தனது உரையில், ‘தெய்வீகக் காதல் கூட ஒரு பெண் ஆண் கடவுளை நினைத்து உருகி, அவனுக்காகவே அர்ப்பணித்துக் கொண்டவளாக இருப்பதற்கே அனுமதிக்கிறதே தவிர, ஒரு ஆண், பெண் கடவுளுக்காக உருகி, உருகி, அந்தக் கடவுளுக்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொள்ள அனுமதிப்பதில்லை. தெய்வீகக் காதல் பெண்ணடிமையைத் தான் வலியுறுத்துகிறது. காதல் என்பதே ஒரு நிலையற்ற உணர்வு என்று பெரியார் கூறுவதை சுட்டிக்காட்டிய, மதிமாறன், ஜாதி கடந்த காதல்கூட ஒரே வர்க்கப் பின்னணியில்தான் நிகழ்கிறது; ஜாதி கடந்த காதலை வர்க்க உணர்வுகளே தீர்மானிக்கின்றன’ என்றார்.

விழாவின் சிறப்பு விருந்தினராக 1979ஆம் ஆண்டில் ஜாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்ட பேராசிரியர் சரசுவதி-விடுதலை இராசேந்திரன் கவுரவிக்கப்பட்டனர். விழாவில் அவர்கள் கேக் வெட்டி ஜாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்ட 17 இணையர்களுக்கு விருதுகளையும், பெரியார் நூல்களையும் கழக சார்பில் வழங்கினர். ஜாதி மறுப்பு இணையர்களுக்கு காதல் பரிசாக ‘ரோஜா’ மலர்களும் வழங்கப்பட்டன.

பிப்.14 அன்று உலகக் காதலர் நாள் என்றாலும், கழகத் தோழர்கள் 11ஆம் தேதியே நிகழ்வை நடத்த திட்டமிட்டனர். இதற்கு இந்துமத வெறி அமைப்புகளிடமிருந்து மிரட்டல்கள் வந்ததோடு, நிகழ்வுக்கு அனுமதி தரக்கூடாது என்று காவல்துறைக்கு அழுத்தம் தந்தனர். காவல்துறை நிகழ்ச்சியை நடத்தவிடாமல் தொடர்ந்து நெருக்கடிகளை உருவாக்கியது. அம்பேத்கர் மணிமண்டபத்தில் மின் தொடர்புகளைத் துண்டித்தார்கள். தடை - நெருக்கடிகளை மீறி, மின் ‘ஜெனரேட்டர்’ ஏற்பாடுகளை செய்து, நிகழ்ச்சிகள் திட்டமிட்டபடி நடத்தப்பட்டன. அம்பேத்கர் மணிமண்டபம் எதிரே உயர்நீதிமன்ற நீதிபதிகள் வீடுகள் இருப்பதால் அங்கே ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்தி நிகழ்ச்சிகளை நடத்தக் கூடாது என்று காவல்துறையினர் கூறினர். நிகழ்வில், பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், காவல்துறையின் இந்தக் கூற்றுக்கு தக்க பதிலடி தந்தார்.

“இந்த காதலர் நாள் விழாவை ஜாதி எதிர்ப்பு, ஜாதி ஆணவப் படுகொலை எதிர்ப்பாகவே இங்கே நடத்துகிறோம். கடந்த பிப்ரவரி 5ஆம் தேதி உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வு, ஜாதி மறுப்புத் திருமணங்களை எதிர்ப்போருக்கும் ஒரே குலத்தில் ஒரே ஜாதியில் திருமணங்களை நடத்த அனுமதிக்க மாட்டோம் என்று மிரட்டி சட்டத்தைக் கையில் எடுக்கும் ஜாதி கட்டப் பஞ்சாயத்துகளை நடத்துவோருக்கும் கடும் எச்சரிக்கை செய்துள்ளது. வயது வந்த ஆணும் பெண்ணும் தங்களுக்குள் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்தால், அதில் தலையிட்டு தடுக்க மூன்றாவது நபர்களுக்கு சட்டப்படி எந்த உரிமையும் இல்லை. சட்ட விரோத திருமணமாக இருக்கும் என்றால், அதை நீதிமன்றம் பார்த்துக் கொள்ளும். சமூகத்தின் மனசாட்சிக் காவலர்களாக தங்களைத் தாங்களே முன்னிறுத்திக் கொள்ள எவருக்கும் உரிமை கிடையாது. திருமணங்களை நீதிமன்றம் சட்டத்தின் பார்வையில் மட்டுமே பார்க்கும். ஜாதி சம்பிரதாயங்களோ, குலகோத்திரங்கள் சரியாகப் பின்பற்றப்பட்டதா என்பதையோ நீதிமன்றம் பார்க்க வேண்டிய அவசியமில்லை என்று உச்ச நீதிமன்றம் திட்டவட்டமாக தீர்ப்பளித்திருக்கிறது.



உச்சநீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பை வரவேற்று தான் ஜாதி ஆணவப் படுகொலைகளைக் கண்டித்து ஜாதி எதிர்ப்பு நாளாக இந்த காதலர் நாளை நடத்துகிறோம். உச்சநீதிமன்ற நீதிபதிகளின் தீர்ப்பை வரவேற்கும் இந்த நிகழ்வு இங்கே எதிரில் இருக்கும் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கு எதிரானது என்று காவல் துறை கருதுகிறதா? உலக காதலர் நாள் என்பது அய்.நா.வால் அங்கீகரிக்கப்பட்ட உலகம் முழுதும் கொண்டாடப்படும் சர்வதேச நாள். இதைத் தடைப்படுத்த காவல் துறைக்கு எந்த உரிமையும் கிடையாது” என்று பலத்த கரவொலிக்கிடையே அறிவித்தார்.

விழாவின் நிறைவாக ஜாதி எதிர்ப்பு உறுதிமொழியை கூட்டத்தினர் எடுத்தனர். உலக காதலர் நாளில் உறுதி ஏற்கிறோம். ஜாதி மறுப்பு திருமணங்களை ஆதரிப்போம்; ஜாதி ஆவணப் படுகொலைகளை தடுத்து நிறுத்துவோம்; ஜாதி மறுப்புத் திருமணம் செய்த குடும்பங்களிடையே உறவுகளை வளர்ப்போம்; தந்தை பெரியார் வாழ்க; புரட்சியாளர் அம்பேத்கர் வாழ்க - என அனைவரும் எழுந்து நின்று உறுதி ஏற்றனர். அனைவருக்கும் மாட்டுக்கறி உணவு வழங்கப்பட்டது. கழகத்தைச் சாராத ஏராளமான பெண், ஆண் இளைஞர்களும் நிகழ்வில் பங்கேற்றனர்.

வழக்கமாக பிப். 14 அன்று இந்து முன்னணியினர் கடற்கரையில் காதலர் நாளை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தி காதலர்களை மிரட்டுவது வழக்கம். இந்த ஆண்டு பிப்.11ஆம் தேதியே கழகம் காதலர் நாள் நடத்தியதால், 11ஆம் தேதியே ‘பெசன்ட் நகர்’ கடற்கரையில் காதலர் நாள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை இந்து முன்னணியினர் நடத்தினர்.

### புரட்சிப் பெரியார் முழக்கம்; முக்கிய வேண்டுகோள்!

சந்தா முடிவடைந்த தோழர்களுக்கு இதழ் நிறுத்தப்பட்டுள்ளது. தோழர்கள் சந்தாக்களை புதுப்பித்தல் மற்றும் புதிய உறுப்பினர் சேர்க்கைகான பணிகளை விரைந்து முடிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

– நிர்வாகி

– 98414 89896

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 15th February 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN